**இலங்கை கரம் சம்மேளனம் - 2024**
**-------------------------------------------------**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை கரம் சம்மேளனத்தின் (''சம்மேளனம்'') 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, வருமானம் மற்றும் செலவின கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1993 இன் 47 ஆம் இலக்க விளையாட்டுக்கள் (திருத்திய) சட்டத்தின் பிரிவு 9 ஆல் திருத்தியமைக்கப்பட்ட 1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க விளையாட்டுக்கள் சட்டத்தின் பிரிவு 21 அ வின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, சம்மேளனத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வியாபாரங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க (எஸ்எம்ஈஎஸ் களுக்கான எஸ்எல்எவ்ஆர்எஸ்) உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வியாபாரங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க (எஸ்எம்ஈஎஸ் களுக்கான எஸ்எல்எவ்ஆர்எஸ்) தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது. நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சம்மேளனத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது சம்மேளனத்தைக் கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் சம்மேளனம்

தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

சம்மேளனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சம்மேளனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு ( நிதிக் கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக சம்மேளனத்தின் கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக் கொள்வதற்காகவேயன்றி சம்மேளனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக சம்மேளனத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில்

அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது சம்மேளனத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது சம்மேளனத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க சம்மேளனம் செயற்படுகின்றதாஎனவும்,

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்,

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்,

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிறுவனத்தின் தொடர்தியங்கும் தன்மை

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|
| 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், மொத்தப் பொறுப்புக்களானது அதன் மொத்தச் சொத்துக்களைவிட ரூபா 1,695,115 அல்லது 212 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. அதற்கு மேலதிகமாக, மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு நடைமுறை பொறுப்புக்களானது அதன் நடைமுறைச் சொத்துக்களைவிட ரூபா 1,718,749 அல்லது 221 சதவீதத்தினால் அதிகரித்திருந்ததுடன் திரண்ட நிதியானது தொடர்ச்சியாக | மொத்தச் சொத்துக்கள், மொத்தப் பொறுப்புக்கள், நடைமுறைச் சொத்துக்கள் மற்றும் நடைமுறைப் பொறுப்புக்கள் என்பன தொடர்பான அளவு ரீதியான தகவல்கள் சரியாகும். அதற்கு மேலதிகமாக, திரண்ட நிதியானது தொடர்ச்சியாக மறைப் பெறுமானத்தினை காட்டுகின்றது என்பதும் கூட சரியாகும். | தொடர்ந்தியங்கும் தன்மையில் தொடர்வதற்கான இயலுமை பற்றி நிதிக் கூற்றுக்களில் ஒரு குறிப்பாக சம்மேளனம் வெளிப்படுத்த வேண்டும். |

மறைப் பெறுமானத்தினையே காட்டுகின்றது, இது சம்மேளனத்தின் தொடர்ந்தியங்கும் தன்மையில் பாதகமான முறையில் தாக்கம் செலுத்தக்கூடும். மேலும், சம்மேளனமானது இவ் விடயத்தினை நிதிக் கூற்றுக்களில் ஓர் குறிப்பாக வெளிப்படுத்தியிருக்கவில்லை.

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுக்கான குறிப்புகள் | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| 2024 மே 03 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி இல 2382/32 இல் பிரசுரிக்கப்பட்ட 2024 01 ஆம் இலக்க விளையாட்டு துறைக்கான தேசிய சம்மேளனங்களின் ஒழுங்குவிதிகளின் பகுதி II இன் பிரிவு 3 (1) (ii) | சர்வதேச தரவரிசையின் தற்போதய நிலை, குறிப்பிட்ட காலப்பகுதியினுள் எதிர்பார்க்கப்படும் இலக்குகள் மற்றும் செயல்திறனை அதிகரிப்பதற்கான தந்திரோபயங்கள் என்பனவற்றினை உள்ளடக்கி எதிர்வரும் பத்து வருட காலப்பகுதிக்கான ஓர் நிறுவனத்திட்டமானது விளையாட்டு அபிவிருத்தி பணிப்பாளர் நாயகத்திற்கு அவரது அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | உடன்பட்டனர். | சம்மேளனமானது விளையாட்டுத்துறை பிரமாணங்களுடன் இணங்கிநடக்க வேண்டும். |
| விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட 2022 மே 31 ஆம் திகதிய 2022/02 ஆம் இலக்க உள்ளக சுற்றறிக்கையின் பந்தி 03 | "ஒவ்வொறு கொடுப்பனவு பட்டியல்களும் இரண்டு நிறைவேற்றுத்தர உறுப்பினர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுமதிக்கப்பட வேண்டியதுடன் காசு அல்லது காசோலையினை பெற்றுக்கொள்ளும் நபரின் கையொப்பமும் பட்டியலில் பெறப்படவும் வேண்டும்." இருப்பினும், மீளாய்வாண்டின் போது செய்யப்பட்ட கொடுப்பனவுகள் மொத்தம் ரூபா 6,121,407 தொடர்பாக இதனைச் | பட்டியல்களில் கையொப்பமிட இயலாமையின் காரணமாக ஓர் தவறு ஏற்பட்டுள்ளது என்பதனை நான் ஏற்றுக்கொள்கின்றேன். | கொடுப்பனவுகளின் வெளிப்படைத்தன்மை மற்றும் உண்மைத்தன்மையினை சம்மேளனமானது உறுதிப்படுத்த வேண்டும். |

செய்ய சம்மேளனம் தவரியிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சம்மேளனத்தின் மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 522,660 இற்கு எதிராக ரூபா 426,837 ஆன குறையாக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 949,498 ஆன பின்னடைவொன்று அவதானிக்கப்பட்டது. முன்னய ஆண்டுடன் ஒப்பிடுகையில், இப் பின்னடைவிற்கான பிரதான காரணமாக மீளாய்வாண்டின் போதான உலக கிண்ணச் செலவுகள் ரூபா 5,087,777 இனால் அதிகரித்திருந்தமையே ஆகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|
| 2024 ஆம் ஆண்டில் பதினொறு (11) சுற்றுப் போட்டிகளை நடாத்த திட்டமிடப்பட்டிருந்தது. இருப்பினும், மீளாய்வாண்டின் போது அவைகளில் ஆறு (06) மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தது. | சர்வதேச சாம்பியன்சிப் போட்டிகளில் பங்கேற்பதற்காக தேசிய அணியினை தயார்படுத்துவதற்கான பயிற்சி காலத்தின் போது ஏனைய போட்டிகளை நடாத்த இயலாமை மற்றும் நிதி வளங்களிளை தேடிக்கொள்வதற்கு எடுக்கும் காலம் என்பன காரணமாக, திட்டமிட்ட படி சுற்றுப்போட்டிகளை நடாத்த முடியவில்லை. | சம்மேளனமானது திட்டமிட்ட சுற்றுத்தொடர்கள் மற்றும் செயற்பாடுகளை தவறாது நடாத்தல் வேண்டும். |

### 3.2 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|
| பெறுகை செயன்முறைகளை பின்பற்றாமல், மீளாய்வாண்டின் போது நடாத்தப்பட்ட உலக மற்றும் ஆசிய கரம் சாம்பியன்சிப் போட்டிகளிற்காக பங்குபற்றியிருந்த இரண்டு அணிகளிற்காக ரூபா 4,419,720 கிரயமான விமானச் சீட்டுக்களானது கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | குறிப்பிட்ட நாட்களிற்குள் பெறுகை நமைமுறையினை பின்பற்றுவது சாத்தியமில்லை என்றாலும், நாங்கள் மிகவும் சிக்கனமாகவே செயல்பட்டோம் என்பதனை குறிப்பிட விரும்புகின்றேன். | பொருட்கள் சேவைகளை பெறுகை செய்யும் போது சம்மேளனமானது பெறுகை நடைமுறைகள் மற்றும் வழிகாட்டியுடன் இணங்க வேண்டும். |